அத்தியாயம் 1

ததஸ்வான்னம் யுதிஷ்டிர

# அன்னத்தின் மகிமையும் அன்னதானத்தின் பெருமையும்

**ததஸ்வான்னம் ததஸ்வான்னம் ததஸ்வான்னம் யுதிஷ்டிர**

''யுதிஷ்டிரா! அன்னமளி! அன்னமளி! ஓயாமல் அளி!'' ஸ்ரீ பவிஷ்ய புராணத்தில் ஸ்ரீகிருஷ்ணர் யுதிஷ்டிரருக்கு அன்னதானத்தின் மகிமையைப் பற்றி உபதேசிக்கையில் இவ்வாறு ஆணையிடுகிறார்[1].

ஸ்ரீபவிஷ்ய புராணம் மஹாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணருக்கும் யுதிஷ்டிரருக்கும் நடந்த உரையாடலைக் கூறுகிறது. இது யுதிஷ்டிரர் யுத்தத்தில் வெற்றியடைந்த பின்னர் மேற்கொண்ட அசுவமேத யக்ஞத்தின் முடிவில் நடந்த உரையாடல் போலும். யக்ஞத்திற்கு முன், யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரின் விருப்பப்படி பீஷ்மபிதாமஹரிடம் விரிவான தர்மோபதேசம் பெறுகிறார். யுதிஷ்டிரர் தம் சகோதரர்களுடன், ஸ்ரீகிருஷ்ணரின் முன்னிலையில் அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் பீஷ்மபிதாமஹரின் காலடிகளில் அமர்ந்து தமக்கு உபதேசிக்குமாறு வேண்டுகோள் விடுக்க, அந்த வயது முதிர்ந்த பெரியவர் ஹஸ்தினாபுரத்தின் அரியணையில் புதிதாக அமர்ந்த அந்த அரசருக்குத் தருமத்தின் அனைத்து அம்சங்ளையும் முக்கியமாக ராஜ தருமத்தை விரிவாக உபதேசிக்கிறார். பீஷ்மபிதாமஹரின் உபதேசம் கிட்டத் தட்ட 25,000 சுலோகங்களுக்கு நீள்கிறது; மஹாபாரதத்தில் நாலில் ஒரு பகுதியாய் விளங்கும் இப்பகுதி சாந்தி பர்வம், அனுசாஸன பர்வம்

[1] பவிஷ்ய. 4.169.2, ப. 526

ஆகிய இரண்டு பிரதான பர்வங்களைக் கொண்டுள்ளது. இந்த மாபெரும் தருமப் பிரவசனம் நிறைவேறிய பின்னரே பீஷ்மபிதா மஹர் தம் பூத உடலைத் துறக்கிறார். பின்னர், ஸ்ரீகிருஷ்ணரும், கிருஷ்ணதுவைபாயன வியாசரும், யுத்தத்தில் உண்டான உயிர் நாசத்தாலும், பிதாமஹரின் மரணத்தாலும் துக்கித்திருந்த யுதிஷ்டிரரை மாபெரும் மன்னர்கள் நடத்தும் யக்ஞமான அசுவமேத யக்ஞத்தை மேற்கொள்ளத் தூண்டுகின்றனர்.

அசுவமேத யக்ஞத்தை மேற்கொண்டு நிறைவேற்றுவது அத்துணை எளிய செயல் அல்ல; அதற்கு அளவற்ற பொருட்செல்வமும், மிகுந்த சாகசமும் சௌரியமும் தேவையாகும். இத்தகைய யாகத்தை பெருமுயற்சி செய்து நடத்தி முடித்த பிறகு அந்த மாபெரும் பொறுப்பிலிருந்து விடுபட்ட யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்தே தருமத்தின் நெளிவு சுளிவுகளைப் பற்றின உபதேசம் பெற விரும்புகிறார். ஸ்ரீகிருஷ்ணரின் இந்த உபதேசங்கள் மேலும் 1300 சுலோகங்களுக்கு நீளுகின்றன; இதுவே மஹாபாரதத்தின் தாக்ஷிணாத்திய பாடத்தின் 'வைஷ்ணவ தர்ம பர்வம்' என்று பிரசித்தி பெற்றுள்ளது.

தருமத்தைப் பற்றிய இந்த மாபெரும் உபநியாசம் முடிவுறுகையில் யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணரிடம் பீஷ்மபிதாமஹரின் பூரண போதனையின் சாராம்சத்தைக் கேட்கிறார்[2]:

भीष्मवाक्यात् सारभूतं वद धर्मं सुरेश्वर।

அதற்கு ஸ்ரீகிருஷ்ணர் பதிலளிக்கிறார்[3]:

अन्नेन धार्यते सर्वं जगदेतत् चराचरम्...
अन्नदः प्राणदो लोके प्राणदः सर्वदो भवेत्।
तस्मादन्नं विशेषेण दातव्यं भूतिमिच्छता॥

உலகம் முழுவதும் உணவையே ஆதாரமாகக் கொண்டுள்ளது... உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்; உயிர் மட்டுமல்ல; அனைத்தையுமே கொடுத்தோராவர். எனவே, இம்மையிலும் மறுமையிலும் நன்மையை நாடுபவர் அன்னதானத்தை மேற்கொள்ள பெரும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

[2] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6355
[3] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6355

பீஷ்மபிதாமஹரின் மகத்தான உபதேசத்தின் சாரமாக ஸ்ரீகிருஷ்ணர் அன்னதானத்தின் மகிமையை எடுத்துக் கூறுகிறார். இதை நினைப்பூட்டுவதன் பொருட்டே ஸ்ரீபவிஷ்ய புராணத்தில் அன்னதான மாகாத்மியத்தின் வருணனை ஸ்ரீகிருஷ்ணரின் கீழ்க்கண்ட ஆணித்தரமான ஆதேசத்துடன் தொடங்குகிறது போலும்: ''ததஸ்வான்னம் ததஸ்வான்னம் ததஸ்வான்னம் யுதிஷ்டிர''

## அன்னதான மாகாத்மியம்: உணவு அளிப்பதின் பெருமை

பீஷ்மபிதாமஹரின் உபதேசச் சாரமாக ஸ்ரீகிருஷ்ணரின் விரிவுரைகள் ஒரு பதினைந்து சுலோகங்களிலேயே முடிந்து விடுகின்றன. முதல் பத்து சுலோகங்கள் ஒரு கிருகஸ்தனின் வாழ்க்கையில் அன்னதானம் வகிக்கும் மையத்தன்மையைக் கூறுகின்றன. அடுத்த ஐந்து சுலோகங்கள் அன்னத்தின் பெருமையையும் ரசகர்ப்பமான பிருதிவியிலிருந்து அது தோன்றுதலையும், அனைத்து உயிர்களுடன் அதற்குள்ள நெருங்கிய தொடர்பையும் விளக்குகின்றன.

பாரதத்தின் சனாதன சுருதி, ஸ்ம்ருதி, இதிகாச புராணங்களிலும் மற்ற புராதன இலக்கியங்களிலும் அன்னம் மற்றும் அன்னதானத்தின் மகத்துவமும் மகிமையும் விரிவாக வருணிக்கப்பட்டுள்ளன. பின் வரும் அத்தியாயங்களில் அன்னம் மற்றும் அன்னதானத்தின் சிறப்புத் தன்மையைப் பற்றி நமது புராதன இலக்கியங்கள் மொழிவதை அறிந்து கொள்ள முயலுவோம். எனினும், மஹாபாரதத்தில் வைஷ்ணவ தர்ம பர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணரால் உபதேசிக்கப்பட்ட இந்த பதினைந்து சுலோகங்களில் அன்னத்தையும் அன்னதானத்தையும் பற்றிய பாரதீய பரம்பரையின் அடிப்படைச் சிந்தனை மற்றும் உணர்வுகளின் சாரமே அடங்கியுள்ளது என்றால் மிகையாகாது.

அன்னதானத்தின் மகிமையை யுதிஷ்டிரருக்கு உபதேசிக்கையில் ஸ்ரீகிருஷ்ணர் இவ்வாறு கூறுகிறார்[4]:

अन्नेन धार्यते सर्वं जगदेतच्चराचरम् ।
अन्नात् प्रभवति प्राणः प्रत्यक्षं नास्ति संशयः ॥

[4] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6355

உலகம் அனைத்தும் உணவையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. உணவிலிருந்தே உயிர் உண்டாகிறது; இது வெளிப்படை, இதில் எந்த சந்தேகமும் இல்லை.

कलत्रं पीडयित्वा तु देशे काले च शक्तितः ।
दातव्यं भिक्षवे चान्नमात्मनो भूतिमिच्छता ॥

எனவே, இகத்திலும் பரத்திலும் நல்வாழ்வை விரும்புபவன், யாசிப்பவர்கள் அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும். அவன் தன் குடும்பத்திற்கு உண்டாகும் துன்பத்தைப் பற்றியும் கவலை கொள்ளாமல் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப தன்னால் இயன்ற அளவு உணவளிக்க வேண்டும்.

विप्रमध्वपरिश्रान्तं बालं वृद्धमथापि वा ।
अर्चयेद् गुरुवत् प्रीतो गृहस्थो गृहमागतम् ॥

வயோதிகரையும், பாலகரையும், களைப்புற்ற வழிப்போக்கரையும், மதிப்பிற்குரிய பெரியோரையும் தன் இல்லத்தின் வாயிலில் கண்ட ஒரு கிருகஸ்தன் மனதில் மகிழ்ச்சியுடன், தன் குருவிற்குச் செய்வதைப் போலவே மரியாதையுடன் விருந்தோம்ப வேண்டும்.

क्रोधमुत्पतितं हित्वा सुशीलो वीतमत्सरः ।
अर्चयेदतिथिं प्रीतः परत्र हितभूतये ॥

மறுமை இன்பத்தை நாடுபவன் கோபம், பொறாமை இவற்றை விடுத்து தன் இல்லத்திற்கு வருகை தந்த அதிதியை கௌரவத்துடனும் பணிவன்புடனும் உபசரிக்க வேண்டும்.

अतिथिं नावमन्येत नानृतां गिरमीरयेत् ।
न पृच्छेद् गोत्रचरणं नाधीतं वा कदाचन ॥

இல்லத்திற்கு வருகை தரும் அதிதியை ஒருபொழுதும் அவமதிக்கக்கூடாது. அவர் முன்னிலையில் வாயிலிருந்து எந்த அசத்தியத்தையும் வெளியிடக்கூடாது. அவருடைய குலம், கோத்திரம், கல்வித் தகுதி ஆகியவற்றையும் ஒருபொழுதும் கேட்கக் கூடாது.

चण्डालो वा श्वपाको वा काले यः कश्चिदागतः ।
अन्नेन पूजनीयः स्यात् परत्र हितमिच्छता ॥

*தகுந்த வேளையில் வாசற் கதவருகே காணப்படும் ஒருவன், அவன் சண்டாளனாக இருந்தாலும் அல்லது ஸ்வபாகன், நாயின் மாமிசத்தை உட்கொள்ளுபவனாக இருந்தாலும் மறுமை உலகில் இதத்தை விழையும் ஒருவரால் உணவைக்கொண்டு பூஜிக்கத் தகுந்தவனேயாம்.*

पिधाय तु गृहद्वारं भुङ्क्ते योऽन्नं प्रहृष्टवान् ।
स्वर्गद्वारपिधानं वै कृतं तेन युधिष्ठिर ॥

*யுதிஷ்டிரனே, எவன் ஒருவன் தன் இல்லத்தின் வாயிலை அடைத்துவிட்டுத் தான் மட்டும் உண்டு மகிழ்கிறானோ அவன் நிச்சயமாக சுவர்க்கத்தின் கதவுகள் தனக்கு அடைக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்கிறான்.*

पितॄन् देवानृषीन् विप्रानतिथींश्च निराश्रयान् ।
यो नरः प्रीणयत्यन्नैस्तस्य पुण्यफलं महत् ॥

*யார் ஒருவன் பித்ருக்களையும், தேவர்களையும், ரிஷிகளையும், மதிப்பிற்குரிய பெரியோரையும், இன்னும் தன் வீட்டு வாசலுக்கு வரும் அனைவரையும் அன்னத்தால் திருப்தி செய்கிறானோ, அவனது புண்ணியத்தின் பலன் மிகவும் மகத்தானது.*

कृत्वा तु पापं बहुशो यो दद्यादन्नमर्थिने ।
ब्राह्मणाय विशेषेण सर्वपापैः प्रमुच्यते ॥

*எவன் ஒருவன் உணவை யாசிப்போருக்கு, குறிப்பாக பிராமண யாசகருக்கு உணவிடுகிறானோ, அவன் மகாபாவியானாலும், அனைத்துப் பாவங்களிலிருந்தும் விமோசனம் அடைகிறான்.*

अन्नदः प्राणदो लोके प्राणदः सर्वदो भवेत् ।
तस्मादन्नं विशेषेण दातव्यं भूतिमिच्छता ॥

*உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே; மற்றும் அனைத்தையும் கொடுத்தவராவர். எனவே இகபர உலகில் சுகத்தை விரும்புவோர் உணவளிக்க பிரத்யேக முயற்சி மேற்கொள்ள வேண்டும்.*

## அன்ன மாகாத்மியம்: உணவின் பெருமை

மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்து சுலோகங்களும் அன்னதானத்தின் மகத்துவத்தை வருணிக்கின்றன. அடுத்த ஐந்து சுலோகங்களில் உயிர்களின் உற்பத்தியிலும் மற்றும் அவற்றின் பாதுகாப்பிலும் அன்னத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி ஸ்ரீகிருஷ்ணர் இவ்வாறு உபதேசிக்கிறார்[5]:

अन्नं ह्यमृतमित्याहुरन्नं प्रजननं स्मृतम् ।
अन्नप्रणाशे सीदन्ति शरीरे पञ्च धातवः ॥

*அன்னமே அமிர்தம் என்றழைக்கப்படுகிறது. உயிர் வாழ ஏதுவாயிருப்பதும், பிறப்புக்கு மூலாதாரமாய் விளங்குவதும், அதுவே. உணவு இல்லாவிட்டால் உடலை உருவாக்கியிருக்கும் ஐம்பூதங்களும் அழிந்து விடுகின்றன.*

बलं बलवतो नश्येदन्नहीनस्य देहिनः ।
तस्मादन्नं विशेषेण श्रद्धयाश्रद्धयापि वा ॥

*உணவு குறைந்தால், பலவானும் தன் பலத்தை இழக்கிறான். உணவின்றி இந்த வாழ்க்கையை நிர்வகிக்க இயலாது. எனவே, சிரத்தையுடன் உணவை உட்கொண்டாலும் சரி, அசிரத்தையுடன் உட்கொண்டாலும் சரி, உணவிற்கு வாழ்க்கையில் ஒரு விசேஷ மகத்துவம் உண்டு.*

आदत्ते हि रसं सर्वमादित्यः स्वगभस्तिभिः ।
वायुस्तस्मात् समादाय रसं मेघेषु धारयेत् ।
तत् तु मेघगतं भूमौ शक्रो वर्षति तादृशम् ।
तेन दिग्धा भवेद् देवी मही प्रीता च भारत ॥

*சூரியன் தன் கதிர்களின் வாயிலாக சாறுகள் அனைத்தையும் எடுக்கிறான். வாயுவோ இவற்றைச் சேகரித்து மேகங்களில் பாது காத்து வைக்கிறான். இவ்வாறு மேகங்களில் சேகரிக்கப்பட்ட சாறுகளை இந்திரன் மழை வாயிலாக பூமியின் மீது பொழியச்*

[5] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6355-56

*செய்கிறான். ஓ! பாரதா! இந்தப் பொழிவினால் பொங்கி வழியும் பூமிதேவி மிகுந்த நிறைவை அடைகிறாள்.*

तस्यां सस्यानि रोहन्ति यैर्जीवन्त्यखिलाः प्रजाः ।

मांसमेदोऽस्थिमज्जानां सम्भवस्तेभ्य एव हि ॥

*இவ்வாறு திருப்தியுடன் பிரசன்னமாகியிருக்கும் பூமியிலிருந்து, உணவுப் பயிர்கள் விளைகின்றன. இவ்வுணவுப் பயிர்களினாலேயே சகல உயிர்களும் ஜீவித்திருக்கின்றன. மாமிசமும், கொழுப்பும், எலும்பும், மச்சையும் இப்பயிர்களினாலேயே உண்டாகின்றன.*

*இவ்வாறாக இந்தப் பதினைந்து சுலோகங்களில் ஸ்ரீகிருஷ்ணர் அன்னம் மற்றும் அன்னதானத்தின் முக்கியத்துவத்தைப் பூரணமாக வருணிக்கின்றார். இந்த சுலோகங்களில் அன்னதானத்தைப் பற்றிய பாரதத்தின் கிட்டத்தட்ட அனைத்து சித்தாந்தங்களும் வழங்கப் பட்டுள்ளன. அன்னதானத்தால் கிடைக்கப்பெறும் ஈடிணையற்ற மகத்தான புண்ணியம், தான் உண்பதற்கு முன்பு மற்றவர்க்கு உணவு படைத்தாக வேண்டியதன் அவசியம், உணவு பெறுபவரிடம் பணிவன்புடனும், முகமலர்ச்சியுடனும், இன்சொல்லுடனும் உணவளிக்க வேண்டியதன் அவசியம், வீட்டிற்கு வருகை தந்த அதிதியின் குலம், கோத்திரம், கல்வித்திறன் ஆகியவற்றைப் பற்றிய சிந்தையின்றி ஆதரத்துடன் உணவளிக்க வேண்டியதன் முக்கியத் துவம், தன் வீட்டு வாசலில் காத்திருக்கக் கூடிய யாசகனுக்கு உணவிடாமல் தான் மட்டும் வயிறார உண்பதால் உண்டாகும் பெரும் பாவம் ஆகியவை பற்றி ஸ்ரீகிருஷ்ணர் விளக்குகிறார்.*

*பிறகு ஸ்ரீகிருஷ்ணர் பிரபஞ்சத்தின் அமைப்பில் அன்னத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய பாரதத்தின் அடிப்படை சித்தாந்தங்களை உபதேசிக்கிறார். பாரதத்தின் பண்டைய இலக்கியங்களில் இந்த சித்தாந்தங்கள் பல இடங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப் படுகின்றன. இனி வரும் அத்தியாயங்களில் இந்தத் தத்துவங்களை மேலும் தெளிவாகவும் விரிவாகவும் காண்போம். தற்பொழுது இந்தத் தத்துவங்களின் சாரமாய் ஸ்ரீகிருஷ்ணர் பகவத்கீதையில் அர்ஜுனனுக்குக் கர்மயோகத்தை உபதேசிக்கையில், இந்த சிருஷ்டியில் அன்னம் மற்றும் அன்னதானத்தின் மகத்தான பங்கைப் பற்றி வருணிப்பதைக் காண்போம்.*

## கர்மயோகம்

ஸ்ரீமத்பகவத்கீதையின் மூன்றாவது அத்தியாயத்தில் அர்ஜுனனுக்குக் கர்மயோகத்தை உபதேசிக்கையில், ஸ்ரீகிருஷ்ணர் இவ்வுலக வாழ்க்கையாவது மனிதனுக்கும் மற்றும் சிருஷ்டியின் எல்லா அம்சங்களின் அபிமானி தேவர்களுக்கும் இடையிலுள்ள, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் இடையறாது கொடுத்து வாங்கும் பரிமாற்ற முறையின் தொடர் விளைவே என்பதைத் தெரிவிக்கிறார். இத்தொடர்ச்சியை முறிக்காமலிருப்பதே, அதாவது கொடுத்து வாங்கும் இந்த சிருஷ்டி சக்கரத்தை இயங்க வைப்பதே யக்ஞமாகும். இதுவே கர்மயோகம், அதாவது இவ்வுலகில் வாழவேண்டிய முறையாகும். யக்ஞசிஷ்ட அன்னத்தை உண்ணுவதே, அதாவது, சிருஷ்டியின் அனைத்து அம்சங்களின் பங்கையும் அளித்து விட்டு மிகுந்ததை உண்ணுவதே தகுந்த உண்ணும் முறையாகும். மற்றவருக்கு உரித்தான பங்கையளிக்காமல் தான் மட்டும் உண்ணுவது பாவத்தை உண்ணுவதேயாம். ஸ்ரீகிருஷ்ணரின் உபேதசமாவது [6] :

सहयज्ञाः प्रजाः सृष्ट्वा पुरोवाच प्रजापतिः ।
अनेन प्रसविष्यध्वमेष वोऽस्त्विष्टकामधुक् ॥

சிருஷ்டியின் தொடக்கத்தில் பிரஜாபதி, யக்ஞத்தையும் பிரஜைகளையும் ஒன்றாகப் படைத்து விட்டு பிரஜைகளை இவ்வாறு ஆசீர்வதிக்கிறார்: இந்த யக்ஞத்தின் மூலமாக விருத்தியடையுங்கள். இந்த யக்ஞம் உங்களது 'இஷ்டகாமதுக்' ஆக இருக்கட்டும். உங்கள் எண்ணங்களையும் இச்சைகளையும் பூர்த்தி செய்வதாய் விளங்கட்டும்.

देवान् भावयतानेन ते देवा भावयन्तु वः ।
परस्परं भावयन्तः श्रेयः परमवाप्स्थ ॥

இந்த யக்ஞத்தின் மூலமாக தேவர்களைத் திருப்திப்படுத்துங்கள், தேவர்கள் உங்களைத் திருப்திப்படுத்தட்டும். இவ்வாறு ஒருவரையொருவர் திருப்தி செய்வதன் மூலம், மனிதர்களும் தேவர்களுமான நீங்கள் இருவரும் பரம சிரேயசை, மிகச் சிறந்த பேறை அடையுங்கள்.

---

[6] ஸ்ரீமத்பகவத்கீதை 3.10-16, பார்க்க மஹாபாரதம் பீஷ்ம 27.10-16, ப. 2614-16

इष्टान् भोगान् हि वो देवा दास्यन्ते यज्ञभाविताः ।
तैर्दत्तानप्रदायैभ्यो यो भुङ्क्ते स्तेन एव सः ॥

*யக்ஞத்தால் பூரிப்படைந்த தேவர்கள் மனிதர்களுக்கு அவர்கள் விரும்பிய போகங்களை வழங்குகின்றனர். எனவே தேவர்களால் அளிக்கப்பட்ட இந்த போகங்களை அவர்களுக்கு மீண்டும் சமர்ப்பிக்காமல் தானே அனுபவிப்பவன் ஒரு கள்வனே.*

यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥

*சிருஷ்டியின் அனைத்து அம்சங்களுக்கும் உரித்தான பங்கை அளித்த பின் எஞ்சிய அன்னத்தை அதாவது யக்ஞசிஷ்ட அன்னத்தை உண்பவர் சால்புடையோர். அவர்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் விமோசனம் அடைவர். தனக்கு மட்டும் சமைத்துண்பவர்கள் மகாபாவிகள்; அவர்கள் உண்பது பெரும் பாவத்தையேயாம்.*

अन्नाद् भवन्ति भूतानि पर्जन्यादन्नसम्भवः ।
यज्ञाद् भवति पर्जन्यो यज्ञः कर्मसमुद्भवः ॥

*அனைத்துயிர்களும் அன்னத்திலிருந்து உற்பத்தியானவை; அன்னம் மழையால் உற்பத்தியாகிறது; மழை யக்ஞத்தால் சம்பவிக்கிறது; யக்ஞமாவது கருமத்தால், நற்காரியத்தால் உண்டாகிறது.*

कर्म ब्रह्मोद्भवं विद्धि ब्रह्माक्षरसमुद्भवम् ।
तस्मात् सर्वगतं ब्रह्म नित्यं यज्ञे प्रतिष्ठितम् ॥

*அர்ஜுனா! வேத ரூபமான பிரமத்திலிருந்து கருமம் உண்டாகிறது என்று அறிந்து கொள்; வேத ரூப பிரமம், அட்சரத்தால், அழிவில்லாத பரம புருஷனுடைய முதல் மூச்சால் உண்டாகிறது. ஆகவே பிரமம் எல்லா இடத்திலும் வியாபித்திருந்தாலும் யக்ஞத்தில் எப்பொழுதும் நிலைபெற்றிருக்கிறது என்று அறிந்து கொள்வாயாக.*

एवं प्रवर्तितं चक्रं नानुवर्तयतीह यः ।
अघायुरिन्द्रियारामो मोघं पार्थ स जीवति ॥

இதுவே பிரமனால் உருவாக்கப்பட்ட பரஸ்பரம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் சிருஷ்டி சக்கரம். யார் ஒருவன் பிரமனால் இயக்கப்பட்ட இந்தச் சக்கரத்தை அனுசரித்து செயலாற்ற வில்லையோ அவன் பாவியே. அவன் வெறும் புலன்களின் சுகத்தில் மூழ்கியவன். ஓ! பார்த்தா! இத்தகையவனுடைய வாழ்வு வீணானதே.

ஸ்ரீகிருஷ்ணரின் இந்த உபதேசம் அன்னம், அன்னதானம் பற்றிய பாரதீய சிந்தனையின் அடிப்படை உணர்வுகளை எடுத்துரைக்கின்றன. பின் வரும் அத்தியாயங்களில் கூறப்படுபவை, ஸ்ரீமத் பகவத்கீதையில் அன்னத்தின் மகிமை மற்றும் அன்னதானத்தின் மகத்துவம் பற்றிய இந்த உபதேசம் மற்றும் ஸ்ரீகிருஷ்ணரின் கீழ்க் காணும் மீறமுடியாத ஆக்ஞை, இவற்றின் விரிவுரையாகும்:

ददस्वान्नं ददस्वान्नं ददस्वान्नं युधिष्ठिर ॥

*அன்னமளி, அன்னமளி, அன்னமளி யுதிஷ்டிரா!*